# மேல் மாகாண மாகாண சபை - சபைக்கூட்டம்

**2018 நவம்பர் மாதம் 19 ஆந் திகதி (திங்கள்) மு.ப. 09.30 க்கு**

## நிக ழ்ச்சி நிரல்

**I.** தவிசாளரின் அறிவிப்புக்கள்

**II.** வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

**III.** அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

**IV.** செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

**V.** மனுக்கள்

**VI.** கேள்விகள் / இடைக்கால கேள்விகள்

- **சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி**

**01.** **கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளீர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் 2018.10.23 ஆந் திகதி சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :**

**(Îæ/vi (1)18/ADG - 07)**

அ. 2017 மற்றும் 2018 ஆகிய இரண்டு வருடங்களில் மாகாண சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் எவ்வளவு பேர் (மாகாண ரீதியில்) ஆட்சேர்க்கப்பட்டனர் ?

ஆ. அவர்களில் தற்போது நிரந்தர அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளவர்கள் எத்தனை பேர் ? நிரந்தரமாக்கப்படாதவர்கள் எத்தனை பேர் ?

இ. அவர்களின் பெயர் பட்டியலை (மாவட்ட அடிப்படையில்) சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

ஈ. 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் ஏனைய வைத்தியசாலைப் பணியாட்களுக்குரிய வெற்றிடங்களுக்காக இதுவரை எவ்வளவு பேர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் ? பெயர் மற்றும் பதவிகளை சபைக்கு சமரப்பிக்க இயலுமா ?

உ. 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் இது வரை மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய நிலையங்களிள் சேவைக்காக ஆட்சேர்க்கப்பட்ட தற்காலிக மற்றும் நிரந்தர பதவிகளின் எண்ணிக்கை மற்றும் பெயர் பட்டியலை (மாவட்ட ரீதியில்) சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2018.11.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)18/70)**

அ. அத்தனகல்லை பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தின் நிட்டம்புவ - நீர்கொழும்பு வீதி இலக்கம் 8,14,26 ஆகிய இல்லங்களில் வசிப்பவர்களை நகரை அலங்காரம் செய்வதற்கு எனக் குறிப்பிட்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அவ்விடங்களில் இவர்கள் 50 வருடங்களை விட அதிக காலம் வசிக்கின்றனர் என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

இ. அக் காணியின் உரிமையாளர்கள் எனக் கூறும் இலக்கம் 127 வடதொல்ல நிட்டம்புவையில் வசிக்கும் சொன்டால் அபேசேகர என்ற பெயர் கொண்டவருக்கு அத்தனகல்ல பிரதேச சபையின் தவிசாளரினால் மேலே குறிப்பிடப்பட்ட குடியிருப்பாளர்களை அகற்றுமாறு கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. மிகவும் நீண்ட காலமாக மேற்குறிப்பிட்ட இல்லங்களில் வசிப்பவர்களுக்காக நீதி ஒன்றினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

உ. இல்லையாயின் ஏன் ?

**03.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம்** 2018.11.05 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Íæ/vi**
**(1)18/71)**

அ. மினுவங்கொட கல்வி வலயத்தின் மீரிகம வலயத்தின் இலக்கம் 3 தெல்வல கிராம உத்தியோகத்தர் பிரிவின் கலகஹவத்தை என்று குறிப்பிடப்படும் ஈடிகஹவத்தை என்ற பெயர் கொண்ட காணி ஒன்று கல்வித் திணைக்களத்திடம் காணப்படுகின்றது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா?

ஆ. காணப்பட்டால் அக் காணியின் ஆரம்ப உரிமையாளர் யார் ?

இ. அக் காணி எதன் அடிப்படையில் கல்வித் திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டுள்ளது என்பதனையும் இவ்வேளையில் எவர் காணியின் பொறுப்பை வகிக்கின்றார் என்பதனையும் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஈ. இவ்வேளையில் அக் காணி வருடாந்த குத்தகையின் அடிப்படையின் கீழ் அல்லது பலாபலன்களை பெறும் அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

உ. அவ்வாறு எவருக்கு குத்தகை வழங்கப்பட்டுள்ளது எனவும் இறுதியாக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நிதி மற்றும் உரியவர்களை தெரிவு செய்யும் போது உரிய ஒழுங்கு முறை ஒன்று கடைப்பிடிக்கப்பட்டதா என்பதனையும் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம்** 2018.11.05 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Íæ/vi**
**(1)18/72)**

அ. கல்வித் திணைக்களத்திற்கு உரிய மினுவங்கொட கல்வி வலயத்தின் மீரிகம வட்டாரத்தின் இலக்கம் 03 தெல்வல கிராம உத்தியோகத்தர் பிரிவின் கலகஹவத்தை எனக் குறிப்பிடப்படும் ஈடிகஹவத்தை என்ற பெயர் கொண்ட காணியினை கையளித்த நடவடிக்கைக்கு, புறம்பாக பயன்படுத்தப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அக் காணி ஆரம்ப உரிமையாளருக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. இவ்வேளையில் அக் காணியில் தனிப்பட்ட பாவனைக்காக வீதி ஒன்று வெட்டப்பட்டுள்ளது எனவும் காணியின் எல்லையில் வழிந்தோடும் பகுதிக்கு பாதிப்பு ஒன்று ஏற்படும் முறையில் தனிப்பட்ட தேவைக்காக நிரந்தர பாலம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அதற்காக யார் அங்கீகாரம் வழங்கினார்கள் என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Íæ/vi**
**(1)18/73)**

அ. 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியில் மேல் மாகாண சபையின் நிலையான வைப்பு, பொது முதலீடு, சேமிப்பு உள்ளடங்கிய நிதி ரீதியான சொத்துக்களின் முழுப்பெறுமதி எவ்வளவு ?

ஆ. அத் தினத்தில் அவ் வங்கிக் கணக்கின் நிலுவை தொடர்பான அறிக்கை ஒன்றினை சமர்ப்பிப்பீர்களா ?

இ. 2018 ஒக்டோபர் 31 ஆந் திகதியில் நிலையான வைப்பு, பொது முதலீடு, சேமிப்பு உள்ளிட்ட நிதி சொத்துக்களின் மொத்த பெறுமதி எவ்வளவு ?

ஈ. அத் தினத்தில் அவ் வங்கிக் கணக்கின் நிலுவை தொடர்பான அறிக்கை ஒன்றினை சமர்ப்பிப்பீர்களா ?

**VII.** **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

**VIII.** **சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்**

**IX.** **அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்**

**X.** **சபைக் கூட்டம் (I)**

**<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u>** :

**பிரேரணை** :

"இன்றில் இருந்து அதாவது, 2018.11.19 ஆந் திகதி தொடக்கம் "மேல் மாகாணத்தின் மாகாண சபையின் சபை மண்டபம்" என்று குறிப்பிடப்படும் எல்லா இடங்களிலும் பத்தரமுல்லை சிறீ ஜயவர்தன புர டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, இலக்கம் 204 இல் அமைந்துள்ள மேல் மாகாண சபைக் காரியாலயத்தின் புதிய கட்டடத் தொகுதியின் 12 ஆவது மாடியில் அமைந்துள்ள இப் புதிய சபை மண்டபம் எனக் கருதப்படுவதுடன், மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநரினால் அழைக்கப்படும் கூட்டங்கள் தொடர்பாகவும், அதேபோல் மாகாண சபை வேறு ஒரு தீர்மானம் ஒன்றினை எடுக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும் மேற்கூறப்பட்ட மண்டபம் மேல் மாகாண மாகாண சபை கூடும் இடமாக கருதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது."

**சபைக் கூட்டம் (II)**

**<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u>** :

**பிரேரணை** :

"இந்த மாகாண சபை வேறு தீர்மானம் ஒன்றை எடுக்காதவரை 2018.10.23 மற்றும் 2018.11.07 ஆகிய தினங்களில் நடைபெற்ற சபை நடவடிக்கைச் செயற்குழுக் கூட்டங்களில் இணக்கத்தை தெரிவித்தபடி 2018 நவம்பர் மாதம் 19 ஆந் திகதியும் 2018 டிசெம்பர் மாதம் 04, 05, 06, 07, 10 மற்றும் 11 ஆந் திகதிகல் 2019 ஆம் ஆண்டு நிதிக் கூற்று மற்றும் அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கிய தினங்கலாதல் வேண்டும்."

**சபைக் கூட்டம் (III)**

**<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u>** :

**பிரேரணை** :

இதற்கு முன்னர் எவ்வாறான முடிவொன்று எடுத்திருந்தபோதும் அவற்றினைக் கருத்தில் கொள்ளாது 2018.11.19 ஆந் திகதி நிகழ்ச்சி நிரலில் பொது நடவடிக்கை விடயத்தின் செயற்பாடுகளுக்கு விதி இலக்கம் 49(3) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடையும் இடம்பெறக்கூடாது எனக் கருதி செயற்பட வேண்டும்.

**சபைக் கூட்டம் (IV)**

**<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u>** :

**பிரேரணை** :

"2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்று தொடர்பான விவாதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக நடவடிக்கை ஒழுங்கு விதி 49(5) இல் குறிப்பிடப்பட்டுள்ள கால வேறுபாடுகளினால் எந்தவொரு தடையும் ஏற்படக்கூடாது."

## XI. சபை நடவடிக்கை (I)

**<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u> :**

**பிரேரணை :**

2018.11.07 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கைச் செயற்குழுக் கூட்டத்தில் இணக்கத்தை தெரிவித்தபடி சபைக்கூட்ட செயற்பாடுகளுக்காக விதி இலக்கம் 15(2) ஈ மற்றும் விதி இலக்கம் 15(3) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடை ஒன்றும் ஏற்படக்கூடாது எனக் கருதி செயற்பட வேண்டும்.

## XII. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**<u>2018 ஆம் ஆண்டின் குறைநிரப்பு மதிப்பீடு - 03</u>**

2018 ஆம் ஆண்டிற்காக மேல் மாகாண சபையின் தாபனங்களின் கீழே காணப்படும் தேவைகளுக்காக மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அதாவது,

- சுகாதார சேவைகள் திணைக்களம்

  i. சுகாதாரத் துறையின் புதிய ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் இடமாற்றம் பெற்று வருகை தந்தவர்களுக்கான சம்பளம் மற்றும் படியினைச் செலுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டிற்கு தேவையான மேலதிக ஒதுக்கீடு — ரூ. 729,247,000/-

  ii. பதவி உயர்வு மற்றும் மத்திய சுகாதார அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க அதிகரிக்கப்பட்ட கட்டணங்களுக்கு இணங்க மேலதிகக் கொடுப்பனவினை செலுத்துவதற்கு 2018 ஆம் ஆண்டிற்கு தேவையான மேலதிக ஏற்பாடு — ரூ. 715, 145,000/-

- ஆயுர்வேத திணைக்களம்

  i. ஆயுர்வேத திணைக்களத்தின் புதிய ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்றம் பெற்று வருகை தந்தவர்களுக்காக சம்பளம், படி மற்றும் தொலைத்தொடர்பு சேவைக்காக 2018 ஆம் ஆண்டிற்கு தேவையான மேலதிக ஒதுக்கீடு — ரூ. 63,034,000/-

- கல்வி, கலாச்சாரம் கலை நடவடிக்கை விளையாட்டு இளைஞர் விவகாரம் தகவல் தொழிநுட்பம் தொடர்பான அமைச்சு

  i. அறிவின் கேந்திரமாக பாடசாலைக் கல்வியை மாற்றுவதற்குரிய செயற்றிட்டங்களுக்காக அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியத்தினை செலவு செய்வதற்கு 2018 ஆம் ஆண்டிற்கு தேவையான மேலதிக ஏற்பாடு — ரூ. 21,000,000/-

- பொறியியலாளர் பணிமனை

  i. புதிய ஆட்சேர்ப்பிற்காக சம்பளம், படியினைச் செலுத்துவதற்கு மற்றும் நிலுவைச் சம்பளத்தைச் செலுத்துவதற்குத் தேவையான மேலதிக ஏற்பாட்டினை ஏற்படுத்துதல். — ரூ. 15,493,000/-

  ii. குறைநிரப்பு மதிப்பீட்டு பிரேரணைக்கு இணங்க மேற்கொள்ள வேண்டிய நிர்மாண நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பாரிய வேலைப் பகுதி

ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததினால் பிரதேச பொறியியலாளர் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்காக மேலதிக விடுமுறை தின சம்பளத்தினை செலுத்துவதற்கு ஏற்பட்டமை. ரூ. 9,855,000/-

ரூ. 1,553,774,000/-

ஆகிய தேவைகளுக்காக 2018 ஆம் ஆண்டிற்காக குறைநிரப்பு மதிப்பீடொன்று முன்வைக்கப்பட வேண்டியுள்ளபடியால் அதற்காக 2018 குறைநிரப்பு மதிப்பீடு - 03 இற்குத் தேவையான ரூபா ஒரு பில்லியன் ஐந்நூற்று ஐம்பத்து மூன்று மில்லியன் எழுநூற்று எழுபத்து நான்காயிரம் (ரூ. 1,553,774,000/-) ஏற்பாடாகிய,

| | | |
|---|---|---|
| i. | மாகாண சபை வருமானத்தில் | ரூ. 350,000,000/- |
| ii. | பாடசாலைக் கல்வியியை அறிவின் கேந்திர நிலையமாக மாற்றும் செயற்றிட்டத்திற்காக தற்போது அரசிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள மானியம் | ரூ. 21,000,000/- |
| iii. | அரசிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் மானியம் | ரூ. 1,182,774,000/- |
| | | ரூ. 1,553,774,000/- |

ஆகிய முறையில் தீர்ப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுவதுடன், மேற்கூறியபடி அரசிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் மானியமாகக் குறிப்பிடப்படும் ரூபா 1,182,774,000/- ஆகிய மானியத்தை பெற்றுக்கொடுப்பது தொடர்பான இணக்கத்தினை எதிர்ப்பார்த்து இக் குறைநிரப்பு மதிப்பீடு முன்வைக்கப்படுவதுடன், மேற்கூறப்பட்ட எல்லா விடயங்களுக்கு இணங்கவும் தயாரிக்கப்பட்ட 2018 குறைநிரப்பு மதிப்பீடு - 03 இனை அங்கீகரிக்க வேண்டும்.

உரிய ஆவணங்களின் பிரதிகள் 2018.11.05 ஆந் திகதி சபைக்கூட்ட நிகழ்ச்சி நிரலுடன் எல்லா கௌரவ உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன

**02.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**<u>2018 ஆம் ஆண்டின் குறைநிரப்பு மதிப்பீடு - 03 இற்கு உரிய ஒதுக்கீட்டு நியதிச்சட்டம்</u>**

2018 ஆம் ஆண்டின் குறைநிரப்பு மதிப்பீடு 03 இற்கு தேவையான ரூபா ஒரு பில்லியன் ஐந்நூற்று ஐம்பத்து மூன்று மில்லியன் எழுநூற்று எழுபத்து நான்காயிரம் ஏற்பாடாகிய (ரூ.1,553,774,000/-) ஆகிய நிதியை மேல் மாகாண சபை நிதியத்திலிருந்து செலுத்துவதற்கும், மேல் மாகாண சபை நிதியத்திற்கு இலங்கை அரசாங்கத்தினால் மானியமாக அல்லது வேறு முறையில் வழங்கப்படும் நிதியினை பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரம் வழங்கும் 2017 ஆம் ஆண்டின் ............ ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச்சட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும்.

உரிய ஆவணங்களின் பிரதி 2018.11.05 ஆந் திகதி சபைக்கூட்ட நிகழ்ச்சி நிரலுடன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

**03.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சர் (மே.மா) இனால் சமர்ப்பிக்கப்படும் நியதிச்சட்டம்**

**"மேல் மாகாணத்தின் கழிவுப்பொருள் முகாமைத்துவ விஷேட ஏற்பாட்டு நியதிச்சட்டம்"**

முதலாம் முறை வாசித்தல்

*"மேல் மாகாணத்தினுள் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு தொடர்புடைய மேல் மாகாணத்தின் 2007 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை நியதிச்சட்டத்தினால் நிறுவப்பட்ட மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்துகின்ற திறமுறைகள் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் அதிகாரமளித்தல் தொடர்பாகவும் உள்ளூராட்சி நிறுவனம் மூலம் ஒன்றுசேர்க்க வேண்டியுள்ள வீதிகளில் இருக்கின்ற கழிவுப்பொருள், வீடுகளிலுள்ள கழிவுப்பொருள் முறையாக மற்றும் பொருத்தமான செயன்முறையின் கீழ் அகற்றுவதற்கு ஏற்பாடு தயாரித்தல் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் ஒன்றுசேர்க்க வேண்டிய வீதிகளிலுள்ள கழிவுப்பொருள் வீடுகளில் ஒன்று சேர்கின்ற கழிவுப்பொருள் தவிர்ந்த வேறு கழிவுப் பொருள் உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம்*

*பொறுப்பேற்றல் தொடர்பாக விலையொன்றை தீர்மானித்தல் மற்றும் தரத்தை தீர்மானிப்பது தொடர்பாக ஏற்பாடு தயாரிப்பதற்கு மேல் மாகாணத்தினுள் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை மூலம் செயற்படுத்தப்படுகின்ற கழிவுப்பொருள் முகாமைத்துவ திறமுறைகள் ஒழுங்குபடுத்துவதற்காக கட்டணம் தீர்மானிப்பது தொடர்பாக ஏற்பாடு தயாரித்தலுக்காக இயற்றப்படும் நியதிச் சட்டமாகும்."*

**04.** **இசுர தேவப்பிரிய - கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சர் (மே.மா) இனால் சமர்ப்பிக்கப்படுவதற்கு**

**" 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றினை அங்கீகரிக்க வேண்டும் "**

(நிதிக் கூற்றினை சபைக்கு சமர்ப்பித்தல்)

**05.** **இசுர தேவப்பிரிய - கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சர் (மே.மா) இனால் சமர்ப்பிக்கப்படுவதற்கு**

**"2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றிற்குரிய ஒதுக்கீட்டு நியதிச்சட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும்"**

(ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினை சபைக்கு சமர்ப்பித்தல்)

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.11.07** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம்
மேல் மாகாண மாகாண சபை,
11ஆம் மாடி,
மேல் மாகாண சபை காரியாலயத்தின் புதிய கட்டடம்,
204,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
சிறீ ஜயவர்தனபுர,
பத்தரமுல்லை.